
# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

## தரம் 6



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
வலைகடப்பிடம் : www.nie.lk

# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 6

**(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**

**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானபீடம்**

தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
ஸ்ரீலங்கா

இணையத்தளம் : **www.nie.lk** மின்னஞ்சல் : info@nie.lk

வரலாறு

ஆசிரியர் வழிகாட்டி

தரம் - 6

முதலாம் பதிப்பு : 2015

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN .........

சமூக விஞ்ஞானத்துறை,
மொழிகள், மானுடவியல், மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

அச்சுப்பதிப்பு :
அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

ற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத் துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் கைந்நூல்கள் தயாரிக்கப்படு கின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசிய மாகும். எனினும், ஆசிரியர் கைந்நூலிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள்,தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற் காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் கைந்நூலை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் கைந்நூல் மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் கைந்நூல் ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் கைந்நூல் அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள்,
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

## வளப்பங்களிப்பு

**இணைப்பாக்கம் :** திருமதி . டீ. எச். சந்திமா நிசானி தர்மபால
சிரேட்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

**பாடவிடய ஆலோசனை :**

பேராசிரியர் இந்திராணி முனசிங்க (ஓய்வுநிலை)
கொழும்பு பல்கலைக்கழகம் (ஓய்வுநிலை)
பேராசிரியர் ராஜ் சோமதேவ
களனி பல்கலைக்கழகம், தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவனம்
பேராசிரியர் பத்மசிரி கன்னங்கர
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**எழுத்தாளர் குழு - வெளிவாரி :**

டீ. ஏ. ஏ. சிறிசேன
ஆசிரியர் ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், தம்புத்தேகம
என். கமர்தீன்
ஆசிரியர் ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், கெக்கிராவை
கே. எஸ். ரஞ்சனி
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், ஹொரணை
டபிள்யு. ஏ. பியசீலி
ஆசிரியர் சேவை, ஸ்ரீராகுல ம. ம. வி. அலவ்வை
ஏ. இந்திராணி
ஆசிரியர் சேவை, யேசு பாலகர் கன்னியர் மடம், இரத்தினபுரி
எச். எம். நலின் பண்டார
ஆசிரியர் சேவை, குருவிற்ற வித்தியாலயம், குருவிற்ற

**எழுத்தாளர் குழு - உள்வாரி :**

டீ. எச். சந்திமா நிசானி தர்மபால
சிரேட்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை
டபிள்யு. எஸ். எஸ் குணவர்தன
உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

# ஆசிரியர் வழிகாட்டி

## பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் மையப்பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் வரலாறு எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-9 ஆந்தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகளும் 10-11 ஆந்தரங்களுக்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகளும் ஒதுக்கப்ட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10-11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின்படி பிரதானமாக இருபத்தொரு தேர்ச்சிகளின் கீழ் வரலாற்றுப்பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப் பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'வரலாறு' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொர்பாக ஆசிரியரின் பணி/ கருமங்களை இலகுபடுத்தும் பொருட்டு, பாடத்திட்டத்தின் பகுதிகள் உள்ளடங்குமாறு மாதிரிச் செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன. தமது ஆக்கியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். வரலாறு எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் குறைந்த பட்சம் 50 சதவீதமேனும் செயன்முறைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்1பங்களை திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய 'வரலாறு' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இது தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | **பக்கம்** | |
| பணிப்பாளர் நாயகதத்தின் செய்தி | i i i | |
| பிரதிப் பணிப்பாளர் நாயகதத்தின் செய்தி | iv | |
| கலைத்திட்டக் குழு | v | |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | v i | |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | viii | -xxiii |
| கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1-46 | |
| 6.1 வரலாறு - அறிமுகம் | 1-6 | |
| 6.2 ஆதி மனிதன் | 7-19 | |
| 6.3 உலகின் பண்டைய நாகரிகங்கள் | 20-24 | |
| 6.4 இலங்கையில் குடியேற்றங்கள் நிறுவப்படல் | 25-28 | |
| 6.5 எமது கீர்த்திமிக்க அரசர்கள் | 29-46 | |

# வரலாறு

## பாடத்திட்டம்

# தரம் 6

**(2015 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)**


**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**இலங்கை**
**www.nie.lk**

# அறிமுகம்

நமது நாட்டின் தனித்துவத்தை அறிந்து, அதைப் பாதுகாத்து உலக மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஆற்றல் நிறைந்த நாட்டுப்பற்றுள்ள இலங்கையரை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டத்தின் கட்டாய பாடமாக 2007ம் ஆண்டில் இருந்து வரலாறு பாடம், பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்நோக்கத்தினை மேலும் அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்த 2015ம் ஆண்டிலிருந்து புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் தேசிய பொதுக்குறிக்கோள்கள் மற்றும் தேசிய பொது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு 'வரலாறு' பாடத்திற்கு இனங்காணப்பட்ட தேர்ச்சிகள் 20 ஐ அடிப்படையாகக் கொண்டு 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான வரலாறு பாடக்கலைத்திட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

10 ஆம் தரத்திற்கான இப்பாடத்திட்டமானது அம்முயற்சியின் பெறுபேறாகும். 2015ம் ஆண்டிலிருந்து 10 ஆம் தரத்தில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இப்பாடத்திட்டத்தில் பதினொரு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பத்து பாட உள்ளடக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதன்படி இலங்கையின் தனித்துவத்தையும் எமது பாரம்பரியங்களையும் விளங்கிக் கொள்வதற்கும் வரலாற்று ரீதியான பூகோள மேம்பாடுகள் எமது நாட்டின் வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்களை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

vi. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi. . தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

ß.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

(I) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கனினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
    - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
    - மன எழுச்சிகள், நுண்ணறிவு

(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

(IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

(V). சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

(VI). ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

(VII) ''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

## வரலாறு பாட நோக்கங்கள்

6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை கலைத்திட்டத்தினைக் கற்பதன்மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வரலாற்றுப் போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கிக் கொள்ளல் மூலம் வரலாறெங்கும் நிகழ்ந்த மாற்றங்கள் பற்றி விளங்கிக்கொள்ளல்.
2. கடந்தகாலம் தொடர்பாக பெறும் விளக்கத்தின் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளை அறிந்து கொள்ளலும்.
3. தேசிய தனித்துவத்தினை அறிந்து தேசிய பாரம்பரிய அருஞ்சொத்துக்களைப் பாதுகாத்து, நாட்டுப்பற்றுள்ள பிரசைகளாதல்.
4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.
5. ஏனைய கலாச்சாரங்களுக்கு மதிப்பளித்தல்.
6. கால ஒழுங்கு, மூலாதார நுணுகியாய்வு, காரண காரியத் தொடர்பு என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான விளக்கத்தையும் அறிவையும் நடைமுறை வாழ்க்கைக்காகப் பயன்படுத்துதல்.
7. முக்கிய வரலாற்று நபர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.
8. வரலாற்று ரீதியாக உலகில் ஏற்பட்ட முக்கிய வளர்ச்சிப்போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் புதிய போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறுதல்.
9. காலம், வெளி ஆகியன தொடர்பான அடிப்படை அறிவை வளர்த்துக் கொள்ளல்.
10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

| **தேர்ச்சிகள்** | **தேர்ச்சி மட்டங்கள்** | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படும் மூலாதாரங்களைக் கற்று பகுத்தறியும் சிந்தனையை விருத்தி செய்து கொள்வார். | 1.1 வரலாறு என்பது கடந்த காலம் தொடக்கம் நிகழ்காலம் வரை மனிதனின் கதையே என எடுத்துக் காட்டுவார்.<br><br>1.2 மனிதன் பயன்படுத்திய பொருட்களைக் கொண்டு வரலாற்றைக் கட்டியெழுப்புவார். | 1. வரலாற்று அறிமுகம்<br>1.1 மனிதனின் கடந்தகாலக் கதை<br><br>1.2.1 மனிதனின் கடந்தகாலக் கதையினைக் கட்டி எழுப்பும் விதம்<br><br>1.2.2 காலத்தை அளத்தல் | • வரலாறு என்பது யாது என விளக்குவார்.<br>• வரலாற்றினால் கூறப்படுவது மனிதனின் பண்டைய கதையே என்பதை விபரிப்பார்.<br><br>• மூலாதாரங்களைக் குறிப்பிடுவார்.<br>• மூலாதாரங்களைக் கொண்டு வரலாற்றை விளக்குவார்.<br><br>• வெவ்வேறு முறைகளில் காலத்தை அளப்பார். | 04 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| மானிட விருத்தியின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக் காட்டுவார். | 2.1 சூழல் காரணிகளின் அடிப்படையில் உயிரினங்களின் தோற்றம் மற்றும் மனிதனின் தோற்றத்தை விவரிப்பார். | 2. ஆதிமனிதன்<br>2.1 மனிதன் தோற்றம் பெற்ற சூழல்<br>• புவிதோன்றி நீண்ட காலத்தின் பின்னர் மனிதன் தோன்றியமை<br>• மனிதன் தோன்ற முன்னர் நீரிலும் நிலத்திலும் பல்வேறு பிராணிகள் வாழ்ந்தவை (படங்கள் மூலம்)<br>• அப்பிராணிகள் வாழ்ந்த யுகங்கள்<br>• மனிதன் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்திய சூழலின் தன்மை (படங்கள் மூலம்) | • புவி தோற்றம்பெற்று நீண்ட காலத்தின் பின்னர் மனிதன் தோன்றியமையை விளக்குவார்.<br>• மனிதன் தோன்ற முன்னர் புல்பூண்டுகளும் பிராணிகளும் தோன்றியமையை விபரிப்பார்.<br>• மனிதன் தோன்றிய சூழலை விளக்குவார். | 10 |
| | 2.2 உடலின் இயல்புகள் மாற்றமடைந்து மானிடக் கூர்ப்பு நிகழ்ந்த விதத்தினை எடுத்துக் காட்டுவார். | 2.2 உடல் இயல்புகளுக்கு அமைய மனிதனது விருத்திப் போக்கு (உயிரினங்களின் தோற்றம், ஆரம்ப மனிதனில் இருந்து நவீன மனிதன் வரை - படங்கள் மூலம்) | • மனிதக் கூர்ப்பை விபரிப்பார்.<br>• மனிதக் கூர்ப்புக்குக் காரணம் காட்டுவார்.<br>• நவீன மனிதன் தோற்றம் பெற்றமை ஒரு நீண்ட காலச் செய்முறையாகும் என்பதை எடுத்துக்காட்டுவார். | |
| | 2.3 இயற்கைச் சூழலுக்கு இசைவடையும்போது உடலின் இயல்புகள் மாற்றமடையும் முறையினை நவீன மனிதனை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துவார். | 2.3 நவீன மனிதன்<br>(புவியியற் காரணிகளின் அடிப்படையில் மனிதனின் மாற்றங்கள் (படங்கள் மூலம்) | • வெவ்வேறு சூழல் நிபந்தனைகளை விபரிப்பார்.<br>• வெவ்வேறு சூழல் நிபந்தனைகளின்படி நவீன மனிதனின் உடலியல்புகள் வேறுபடும் விதத்தை விளக்குவார். | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.4 ஆதிமனிதன் எதிர் கொண்ட சவால்களை வெற்றிகண்ட முறை களை விசாரித்தறிந்து நிகழ்காலத்துடன் ஒப் பிட்டு எதிர்கால சவால்க ளுக்கு முகங்கொடுக்கக் கூடிய திறனை விருத்தி செய்துகொள்வார். | 2.4 மனிதனின் பண்பாட்டுக் கூர்ப்பு<br>• ஆதி கால மனிதன் எதிர் கொண்ட அறைகூவல்கள்<br>• அறைகூவல்களை எதிர் கொண்ட விதம் | • ஆதிமனிதன் எதிர்கொண்ட அறைகூவல்களை எடுத்துக் காட்டுவார்.<br>• ஆதிமனிதன் எதிர்கொண்ட அறைகூவல்களை வெற்றி கொண்ட விதத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• பண்டைய முன்மாதிரிகளுக்கு அமைய தற்கால அறைகூவல் களையும் வெற்றி கொள்ளலாம் என்பதை எடுத்துக்காட்டுவார். | |
| மானிட விருத்திப்போக் கினை கடந்த கால தகவல்களின் மூலம் கட்டியெழுப்புவார். | 3.1 உலகின் புராதன நாகரி கங்களை விளக்குவார். | 3. உலகின் புராதான நாகரிகங்கள்<br>3.1.1 உலகின் பண்டை நாகரீகங்கள் மூலம்<br>நாகரிகம் - அறிமுகம் | • நாகரிகம் என்பதனை விளக் குவார்.<br>• நாகரிகமொன்றின் அடிப்படை இயல்புகளை விளக்குவார். | 10 |
| | 3.2 உலகில் காணப்பட்ட புராதன நாகரிகங்க ளையும் மற்றும் அவற் றின் புவியியல் பரம்பலி னையும் தேசப்படத்தில் குறிப்பார். | 3..2 உலகின் புராதன நாகரிகங்கள்<br>• புவியியல் அமைவு, காலப் பகுதிகள். | • உலகின் பண்டைய நாகரிகங் களைக் குறிப்பிடுவார்.<br>• நாகரிகங்களின் அமைவைத் தேசப்படமொன்றில் குறிப்பார்.<br>• நாகரிகங்கள் அமைந்திருந்த இடங்களை விளக்குவார். | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.3 புராதான நாகரிகங்களின் மேம்பாட்டின் ஊடாக நிகழ்காலத்திற்காகப் பெற்றுகொள்ளக் கூடிய முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார். | 3.3 உலகின் புராதான நாகரிகங்கள் மூலம் உலகிற்கு உரித்தாகிய பெறுமானத்தொகுதி (அட்டவணை, படங்கள் மூலம்) | • பண்டைய நாகரிகங்களின் மேம்பாட்டை எடுத்துக்காட்டுவார்.<br>• நாகரிகங்களின் பண்டைப் பெருமைக்குக் காரணங் காட்டுவார்.<br>• பண்டைய நாகரிகங்கள் மூலம் தற்காலத்துக்காகப் பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார். | |
| மானிட விருத்தியின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுவார். | 4.1 இலங்கையின் ஆரம்ப குடியேற்றங்களின் பரம்பலையும் கால வெளிப் பல்வகைமையையும் விளக்கிக் கூறுவார். | 4. இலங்கையில் குடியேற்றங்கள் தாபிக்கப்படல்.<br>4.1 ஆரம்பக் குடியேற்றங்கள்<br>• ஆரம்பக் குடியேற்றங்களின் பரம்பல்<br>• ஆரம்பக் குடியேற்றங்களின் அடிப்படை இயல்புகள்<br>• மேம்பட்ட மக்கட் சமூகங் காணப்பட்டமை (படங்கள் மூலம்)<br>• நகரங்கள் தோன்றியமை | • குடியேற்றங்கள் பரம்பிய பிரதேசங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• ஆரம்பக் குடியேற்றங்களின் அடிப்படை இயல்புகளைக் விளக்குவார்.<br>• ஆதிமனிதனின் இந்நாட்டின் பல்வேறு சூழல் வலயங்களுக்கு இசைவடைந்து வாழ்ந்தமையை விளக்குவார். | 09 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| புராதன இலங்கை மன்னர்களின் வாழ்க் கைச் சரிதைகளையும் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளை யும் மதித்து அவர்க ளின் மேன்மையைத் தேடியறிவார். | 5.1.1 பண்டுகாபய இளவரசன் சவால்களை வெற்றி கொண்டு அரசனாகிய விதத்தைத் தேடியறிவார். | 5. எமது கீர்த்தி மிக்க அரசர்கள்<br>5.1 பண்டுகாபய மன்னன்<br>5.1.1 சிறுபராயம் | • பண்டுகாபய மன்னனின் இளம் பராயம் தொடர்பான தகவல் களைத் திரட்டுவார்.<br>• பண்டுகாபய இளவரசன் எதிர் கொண்ட அறைகூவல்களை விளக்குவார்.<br>• அறைகூவல்களை எதிர்கொள் வற்காக பண்டுகாபய மன்ன னின் வாழ்க்கைச் சரித்திரத் திலிருந்து பெறத்தக்க முன் மாதிரிகளை விளக்குவார். | 03 |
| | 5.1.2 பண்டுகாபய மன்னனின் செயற்றிறனைத் தேடியறிவார். | 5.1.2 அரசனாதல்<br>அரசாட்சி | • பண்டுகாபய மன்னன் அரச னானமையை விளக்குவார்.<br>• பண்டுகாபய மன்னனின் அர சாட்சியை நுணுகி நோக்குவார்.<br>• பண்டுகாபய மன்னனின் மேன் மைக்குக் காரணங் காட்டு வார். | |
| | 5.2.1 இலங்கைக்கு பௌத்த சமயம் கொண்டு வரப்பட்ட மையும் தாபிக்கப் பட்டமையும் தொடர் பாக தேவநம்பிய தீச மன்னன் ஆற்றிய சேவையை எடுத்துக் கூறுவார். | 5.2 தேவநம்பியதீச மன்னன்<br>5.2.1 • இலங்கைக்கு பௌத்தமதம் கொண்டு வரப்படல்<br>• பௌத்தசமயம் தாபிக்கப் படல் | • இலங்கைக்கு பௌத்த சமயம் கிடைத்த விதத்தை விவரிப்பார்.<br>• பௌத்த சமயம் இலங்கையில் தாபிதம் பெற்ற விதத்தைத் விவரிப்பார்.<br>• தேவனம்பியதீச மன்னனின் சேவையை விவரிப்பார். | 04 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.2.2 ஒழுக்கப்பண்புள்ள சமூகத்தினைக் கட்டியெழுப்ப, பௌத்த சமயத்தினால் கிடைத்த பங்களிப்பு மூலம் சிறந்த குணப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார். | 5.2.2 பௌத்த சமயத்தால் கிடைக்கப்பெற்ற அரும்பொக்கிசங்கள் | • பௌத்த சமயம் மூலம் கிடைத்த அரும்பொக்கிசங்களை விபரிப்பார்.<br>• ஒழுக்கமிக்க சமூகம் கட்டியெழுப்பப்பட்ட வித்ததை விளக்குவார்.<br>• தற்கால நன்மக்கட் சமூகத்துக்காக பயன்படுத்தத்தக்க பண்டைய முன்மாதிரிகளைப் எடுத்துக்காட்டுவார். | 05 |
| | 5.3.1 துட்டகைமுனு மன்னனின் மேன்மையை எடுத்துக் காட்டுவார். | 5.3 துட்டகைமுனு மன்னன்<br><br>5.3.1 இளமைக்காலம்<br>• எல்லாள மன்னன்<br>• காவன்திஸ்ஸ மன்னனின் சேவை<br>• துட்டகைமுனு மன்னன் நாட்டை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வருதல் | • எல்லாள மன்னன் நல்வழி நின்ற விதத்தை விபரிப்பார்.<br>• காவன்திஸ்ஸ மன்னனின் சேவைகளை விபரிப்பார்<br>• துட்டகைமுனு மன்னனின் மேன்மையை விளக்குவார்.<br>• துட்டகைமுனு மன்னனின் சமயத் தொண்டை விபரிப்பார்<br>• தற்கால நற்சமூகத்துக்காகப் பயன்படுத்தத்தக்க பண்டைய முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார். | |
| | 5.3.2 துட்டகைமுனு மன்னனின் சமயத்தொண்டை மதித்து நற்பண்புகளை நடத்தையாக்கிக் கொள்வர். | 5.3.2 விகாரைகள் தாபித்தமை | | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.4 வலகம்பாகு மன்னனின் மேன்மையை மதித்து அம்முன்மாதிரிகளை நடத்தையாக்கிக் கொள்வார். | 5.4 வலகம்பாகு மன்னன்<br>• அரசனாதல்<br>• அபயகிரி விகாரையைக் கட்டுவித்தல்<br>• திரிபிடகத்தை நூலுருவாக்கல் | ;• வலகம்பாகு மன்னன் அரசனாகிய விதத்தை விளக்குவார்.<br>• வலகம்பாகு மன்னனின் சமயத் தொண்டுகளை விபரிப்பார்.<br>• வலகம்பாகு மன்னன் வாழ்க்கைச் சரிதம் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக் காட்:டுவார். | 03 |
| | 5.5 வசப மன்னனின் செயல்திறனை விபரிப்பார். | 5.5 வசப மன்னன்<br>• அரசனாதல்<br>• பொருளாதார சேவைகள்<br>* பாரிய குளங்களைக் கட்டுவித் தமை | • வசப மன்னன் அரசாட்சி ஏற்றவிதத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• வசப மன்னனின் ஆட்சி விடயங்களை விளக்குவார்.<br>• வசப மன்னனின் பொருளா தார சேவைகளை எடுத்துக் காட்டுவார். | 03 |
| | 5.6 மகாசேன மன்னனின் மேன்மையை எடுத்துக் காட்டுவார். | 5.6 மகாசேன மன்னன்<br>• பொருளாதார சேவை<br>*பாரிய குளங்கள் கட்டுவித்தமை<br>• ஜேத்தவனாராமையைக் கட்டுவித் தமை | • மகாசேன மன்னனின் நீரப் பாசனச் சேவையை விபரிப்பார்.<br>• மகாசேனனின் கட்டட நிர்மாணத்துறைத் திறமைகளை எடுத்துக காட்டுவார்.<br>• மகாசேன மன்னனின் சமயத் தொண்டுகளை விளக்குவார். | 03 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.7 தாதுசேன மன்னன் ஆற்றிய சேவையை விபரிப்பார். | 5.7 தாதுசேன மன்னன்<br>• அரசனாதல்<br>• பொருளாதார சேவை<br>* நீர்ப்பாசனத் துறையில் பங்களிப்பு<br>• அவுக்கண சிலையை நிர்மாணிக்கச் செய்தமை | • தாதுசேன மன்னன் அரசாட்சியைப் பெற்ற விதத்தை எடுத்துக்காட்டுவார்.<br>• தாதுசேன மன்னனின் பொருளாதார நடவடிக்கைகளை விபரிப்பார்.<br>• தாதுசேன மன்னனின் சமயத் தொண்டுகளை விளக்குவார். | 03 |

# கற்றல் கற்பித்தற் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

## 6.1 வரலாறு அறிமுகம்

வரலாறு என்பது யாது? அது எவ்வாறு கட்டியெழுப்பப்படும்? வரலாற்றைச் சேர்ந்த நீண்ட காலப்பகுதிகள் எவ்வாறு அளக்கப்படும்? ஆகிய விடயங்களின்பால் இந்த அலகில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி**

வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படும் மூலாதாரங்களைக் கற்று, பகுத்தறியும் சிந்தனையையும், தர்க்கிக்கும் ஆற்றலையும் விருத்தி செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

6.1 வரலாறு என்பது கடந்த காலம் தொடக்கம் நிகழ்காலம் வரை மனிதனின் கதையே என எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- வரலாறு என்பது யாது என விளக்குவார்.
- வரலாற்றினால் கூறப்படுவது மனிதனின் பண்டைய கதையே என்பதை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

1.1 மனிதனின் கடந்தகாலக் கதை
- வரலாறு என்பது பண்டைக்காலம் தொடக்கம் வாழ்ந்த மனிதரின் கதையே என்பதை விளக்குதல்.
- பண்டைக்காலம் என்பது கடந்து சென்ற காலம் என்பதையும் அது புவியில் மனிதன் தோன்றிய நாளிலிருந்து நேற்று வரையிலான கால வீச்சாகும் என்பதையும் விளக்குதல்.
  - இக்காலத்துள் மனிதனின் சமூகத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற் காகச் செய்த முயற்சிக்கு சமாந்தரமாக வரலாறு கட்டியெழுப்பப்படும் விதத்தை எடுத்துக் காட்டுதல்.
- தற்காலத்தில் உள்ள எல்லாவற்றுக்கும் வரலாறு உண்டு.
- வரலாறு மனிதனால் கட்டியெழுப்பப்படுகின்றமையை விளக்குதல்.
- மேற்படி விடயங்கள் உள்ளடங்குமாறு வரலாறு என்பது யாது, என்பதை விளங்கிக் கொள்வதற்காக பாடசாலை வரலாறு எனும் தலைப்பில் கட்டுரை எழுதுதல்.

- பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணங்கள், பாடசாலை ஆரம்பிப்பதற்காக முன்னின்று செயற்பட்டோர், ஆரம்பகால ஆசிரியர்களும் மாணவர்களும், பாடசாலையின் விருத்தி
- ஆரம்பகால கட்டடங்கள் மற்றும் பாடசாலை அமைப்பதில் பங்களிப்புச் செய்தோரின் படங்கள்/ ஒளிப்படங்களையும் உள்ளடக்க சந்தர்ப்பமளியுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடசாலை வரலாற்றைக் கண்டறிவதற்குத் தேவையான மூலாதாரங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

மேற்படி செயற்பாட்டில் பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீடு செய்யுங்கள்.

- பாடசாலையின் வரலாற்றை விவரிப்பார்.
- பாடசாலையை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தோரை மதிப்பார்.
- பாடசாலையினது வரலாற்றின் ஊடாக வரலாறு என்பதன் மனிதன் செய்தவையே என்பதற்கு சான்று பகர்வார்.
- தெளிவாகவும் ஆக்கபூர்வமாகவும் கட்டுரையைப் படைப்பார்.
- வகுப்பில் ஏனையோருடன் அறிவைப் பகிர்ந்து பரிமாறிக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

1.1 மனிதன் பயன்படுத்திய பொருள்களைக் கொண்டு வரலாற்றைக் கட்டியெழுப்புவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- மூலாதாரங்களைக் குறிப்பிடுவார்.
- மூலாதாரங்களைக் கொண்டு வரலாற்றை விளக்குவார்.
- வெவ்வேறு முறைகளில் காலத்தை அளப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

1.2 மனிதனின் கதையைக் கட்டியெழுப்பும் விதம்

- கடந்த காலங்களில் மனிதன் செய்தவை பற்றி அறிந்துகொள்ளத் துணையாகும் சான்றுகளை உள்ளடக்கியவையே மூலாதாரங்களாகும்
- கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை அறிந்து கொள்வதற்கு மூலாதாரங்கள் துணையாகும்
- வரலாறு கற்பதற்கான மூலாதாரங்கள் பல்வகைப்படும்
  1. இலக்கிய மூலாதாரங்கள்
     - பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட பல்வேறு ஆவணங்கள், நாட்டார் கதைகள், கிராமியப் பாடங்கள்.
  2. தொல்பொருள் மூலாதாரங்கள்
     - பண்டைக்காலத்தில் மனிதர் பயன்படுத்திய பொருள்கள், கருவிகள், பண்டைய கட்டடங்கள், நாணயங்கள், மட்பாண்டங்கள், சிற்பங்கள், சிலைகள் போன்றவை.

- மேற்படி விடயங்களை உள்ளடக்குமாறு மூலாதாரங்களைத் துணையாகக் கொண்டு அட்டவணையொன்றைப் பூர்த்தி செய்தல்.
  - இதனை தனியாள் செயற்பாடாக வழங்குக.
  - பாடசாலையின் வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குத் துணையாக அமைந்த மூலாதாரங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடி அவற்றைச் சுண்ணப்பலகை யில் குறித்தல்.
  - இணைப்பு - 1 அட்டவணையைப் பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்துகொள்ளச் சந்தர்ப்பமளித்து, சுண்ணப்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள மூலாதாரங்களை அட்டவணையில் குறிக்குமாறு அறிவுறுத்துக.

இணைப்பு - 1

| இலக்கிய மூலாதாரங்கள் | தொல்பொருள் மூலாதாரங்கள் |
|---|---|
| | |

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

மேற்படி செயற்பாட்டில் பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீடு செய்யுங்கள்.

- மூலாதாரங்களைப் பெயரிடுவார்
- மூலாதாரங்களின் பல்வகைமையை விளக்குவார்
- மூலாதாரங்களைத் துணையாகக் கொண்டு வரலாற்றைக் கட்டியெழுப்புவார்.
- ஆசிரியர் - மாணவர் கலந்துரையாடலில் பங்குபற்றுவார்.
- ஒத்துழைத்துச் செயற்படுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இலக்கிய மூலாதாரங்கள், தொல்பொருளியல் மூலாதாரங்களைக் காட்டுவதற்குப் பொருத்தமான படங்கள்

## 1.3 காலத்தை அளத்தல்

- தற்காலத்தில் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் ஆண்டு முறை:
  - கிறிஸ்து ஆண்டு
  - பௌத்த ஆண்டு
  - சாலிலாகன சகாப்தம்
  - ஹிஜ்ரி ஆண்டு

- மேற்படி ஆண்டு முறைகளின் ஆரம்பத்தை விளக்குதல்
  - கிறிஸ்து ஆண்டு - இயேசுவின் பிறப்பு
  - பௌத்த ஆண்டு - புத்தபெருமானின் பரிநிர்வாணம்
  - சாலிலாகன சகாப்தம் - இந்தியாவின் மேற்குப் பிரதேசத்தை ஆண்ட கௌதமி புத்திரன் சாதகர்ன மன்னன் சாக்கியர்களைத் தோற்கடித்து அப்பிரதேசத்தை வெற்றிகொண்டமையை நினைவுகூரல்.
  - ஹிஜ்ரி ஆண்டு - முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்கா நகரில் இருந்து மதீனா நகருக்கு சென்றமை.
- கிறிஸ்துவுக்கு முன் மற்றும் கிறிஸ்துவுக்குப் பின் ஆண்டுகளை விளக்குதல்.
- மேற்படி ஆண்டு முறைகளைக் கொண்டு காலத்தை அளக்கும் விதத்தை விளக்குதல்.
  - கிறிஸ்து ஆண்டுக்கும் பௌத்த ஆண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குதல்.
  - பல்வேறு நிகழ்வுகளை மேற்படி ஆண்டு முறைகளில் காட்டுதல்.

மேற்படி விடயங்கள் உள்ளடங்குமாறு, பல்வேறு நிகழ்வுகளை மேற்படி ஆண்டு முறைகளில் காட்டுதல்

- இதனைத் தனியார் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
- பின்வரும் நிகழ்வுகளை கிறித்த ஆண்டு முறையிலும் பௌத்த ஆண்டு முறையிலும் ஹிஜ்ரி ஆண்டு முறையிலும், சாலிலாகன சகாப்த முறையிலும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
  1. கிறிஸ்து பெருமானின் பிறப்பு - பௌத்த ஆண்டு முறையில்
  2. புத்தபெருமான் பரிநிர்வாணம் பெற்ற ஆண்டு - கிறிஸ்து ஆண்டு முறையில்
  3. முஹம்மது நபி(ஸல்) அவர்கள் பிறந்த ஆண்டு - கிறிஸ்தவ ஆண்டு முறையில்
  4. நீங்கள் பிறந்த ஆண்டு - கிறிஸ்து ஆண்டு முறையில்
     - பௌத்த ஆண்டு முறையில்
     - ஹிஜ்ரி ஆண்டு முறையில்
  5. நடப்பு ஆண்டு - கிறிஸ்தவ சாலிலாகன சகாப்த முறையில் ஆண்டு முறையில்
     - பௌத்த ஆண்டு முறையில்
     - ஹிஜ்ரி ஆண்டு முறையில்

(இதற்காகப் பாடநூலைப் பார்க்க) சாலிலாகன சகாப்த முறையில்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- வெவ்வேறு ஆண்டு முறைகளிலமைந்த நாட்காட்டிகள் (கலண்டர்கள்)

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

மேற்படி செயற்பாட்டில் பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீடு செய்யுங்கள்.

- காலத்தை அளப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வெவ்வேறு ஆண்டு முறைகளைக் குறிப்பிடுவார்.
- கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப்பின் என ஆண்டுகள் பயன்படுத்தப்படும் விதத்தை விளக்குவார்.
- கிறிஸ்து ஆண்டுக்கும் பௌத்த ஆண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குவார்.
- வெவ்வேறு நிகழ்வுகளை கிறிஸ்து ஆண்டு முறையிலும் பௌத்த ஆண்டு முறையிலும் ஹிஜ்ரி ஆண்டு முறையிலும் குறிப்பிடுவார்.
- ஏனையோருடன் ஒத்துழைத்துச் செயற்படுவார்.

## 6.2 ஆதிமனிதன்

இற்றைக்கு பல பில்லியன் (Billion) வருடங்களுக்கு முன்னர் புவி தோன்றி, படிப்படியாகத் தணிந்து குளிர்ச்சியடைந்து திண்ம நிலையை அடைந்து உயிர்ச் சூழல் தோன்றியது. புவி தோன்றி மிக நீண்டகாலத்தின் பின்னர் புல்பூண்டுகள் தோன்றின. புல்பூண்டுகள். தோன்றி மிக நீண்ட காலத்தின் பின்னர் நீர் வாழ் பிராணிகள், தரைவாழ் பிராணிகள் தோன்றின. அவை தோன்றி மிக நீண்ட காலங்களின் பின்னரே மனிதன் தோன்றினான். மனிதன் வாழ்ந்த சூழலுக்கேற்ப, மனிதனின் உடலியியல்புகள் மாற்றமடைந்து தற்கால மனிதன் தோன்றியது வரையான கதையே இந்த அலகில் விவரிக்கப்படுகிறது.

**தேர்ச்சி**

மானிட விருத்தியின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம்

2.1 சூழல் காரணிகளின் அடிப்படையில் உயிரினங்களின் தோற்றம் மற்றும் மனிதனின் தோற்றத்தை விவரிப்பார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- புவி தோற்றம் பெற்று நீண்ட காலத்தின் பின்னர் மனிதன் தோன்றியமையை விளக்குவார்.
- மனிதன் தோன்ற முன்னர் புல்பூண்டுகளும் பிராணிகளும் தோன்றியமையை விபரிப்பார்.
- மனிதன் தோன்றிய சூழலை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

2.1 மனிதன் தோற்றம் பெற்ற சூழல்.
- மனிதன் தோன்ற முன்னர் உலகில் காணப்பட்ட நிலைமை
- புவியின் தோற்றம்
  - புவியின் தோற்றம் தொடர்பாகப் பல்வேறு விஞ்ஞானபூர்வக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை, தொடக்கத்தில் அது மிகச் சூடான திரவமாக இருந்து பின்னர் படிப்படியாக குளிர்ச்சியடைந்து திண்ம நிலையை அடைந்து உயிரிகளின் வாழ்க்கைக்குப் பொருத்தமான நிலையை அடைந்தது.


- இது மிக நீண்ட காலமாக நிகழ்ந்தமையை விவரித்தல்
  - புவி தோன்றி மிக நீண்ட காலத்தின் பின்னர் மனிதன் தோன்றியமை
- மனிதன் தோன்ற முன்னர், நீரிலும் தரையிலும் வாழ்ந்த பிராணிகளும் அவை வாழ்ந்த யுகங்களும்.
- இயன்ற அளவுக்குப் படங்களைப் பயன்படுத்தி பாடத்தை விளக்குக.
  - ஆதியான உயிரினங்கள் கடலில் தோன்றியமை
  - தனிக்கல உயிரிகள், கடற்காளான், புழுக்கள், மூட்டுக்காலிகள், பூச்சிகள், ஈரூடகவாழிகள், நகருயிர்கள் என்றவாறாகப் பிரிநது விருத்தியடைந்த விதம்.
- மனிதன் தோன்றுவதில் பங்களிப்புச் செய்த சூழலின் தன்மை
  - அதிக குளிர்ச்சியான காலநிலை
  - அதிக குளிர்ச்சி காரணமாக பெரும்பாலான பிராணிகள் அழிந்தமை
  - சூடான காலநிலை தோன்றியமை.

- மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பின்வரும் விடயங்களைக் கொண்டு புவி தோற்றம் பெற்றமை, தொடக்கம், புல்பூண்டு தோற்றம் பெற்றமை, பிராணிகள் தோற்றம் பெற்றமை இறுதியில் மனிதன் தோற்றம் பெற்றமை வரையிலான நிகழ்வுகள் படிப்படியாக நிகழ்ந்தமை பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்காக படத்திரட்டினைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தல்.
  - குழுவாகக் கலந்துரையாடிச் செயற்பாட்டை நடத்துமாறு அறிவுறுத்துதல்.
  - வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரித்து இணைப்பு-01 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரத்தையும், இணைப்பு - 02 இல் தரப்பட்டுள்ள படங்களையும் குழுக்களுக்குப் பகிர்ந்தளித்து செயற்பாட்டில் ஈடுபட வழிப் படுத்துதல்.
  - தயாரித்த ஆக்கங்களை வகுப்பில் அனைவரும் பார்க்கத்தக்கவாறு சுவர்களில் தொங்கவிடுங்கள் / ஒட்டுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**



இணைப்பு 01



## செயற்பாட்டுப் பத்திரம்












- மேலே தரப்பட்டுள்ள படத்தை பிறிஸ்டல் அட்டையொன்றில் அல்லது $A_3$ அளவுடைய கடதாசியொன்றில் ஒட்டிக்கொள்ளுங்கள். (படங்கள் ஒட்டுவதற்குப் பொருத்தமான முறையில்)
- குழுவுக்கு ஒன்று வீதம் இவ்வாறான அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- இணைப்பு - 02 இல் தரப்பட்டுள்ள படங்களைத் தனித்தனியாக வெட்டியெடுத்து கால ஒழுங்கு கட்டியெழுப்பப்படும் வகையில் அட்டையில் ஒட்டுங்கள்.
- செயற்பாட்டின் முடிவில் குழு ஆக்கத்தை சுவரில் தொங்க விடுங்கள் /ஒட்டுங்கள்.

**இணைப்பு : 02**


**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

மேற்படி செயற்பாட்டில் பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீடு செய்யுங்கள்.

- உலகில் மனிதன் தோற்றம் பெறுவதற்கு முன்னர் காணப்பட்ட உயிர்ச்சூழலை விவரிப்பார்.
- உயிர்ச்சூழலை காலப்பகுதிகளுக்கு அமைய வரிசைப்படுத்துவார்.
- மனிதன் தோற்றம் பெற்றமையானது மிக நீண்டகாலமாக இடம்பெற்ற பல்வேறு செய்முறைகளின் விளைவாக நிகழ்ந்தமையைக் குறிப்பிடுவார்.
- குழு உணர்வுடன் செயற்படுவார்.
- தகவல்களைத் தெளிவாக முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம்**

2.2 உடலின் இயல்புகள் மாற்றமடைந்து மானிடக் கூர்ப்பு நிகழ்த்த முறையினை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- மனிதக் கூர்ப்பை விபரிப்பார்.
- மனிதக் கூர்ப்புக்குக் காரணங் காட்டுவார்.
- நவீன மனிதன் தோற்றம் பெற்றமையானது ஒரு நீண்ட காலச் செய்முறையாகும் என்பதை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

2.2 ஆரம்ப மனிதனின் விருத்திப் போக்கு

- ஆரம்ப மனிதனின் விருத்திப்போக்கு பிரதானமாக இரண்டு அம்சங்களைக் கொண்டது.
    - i. உடற் கூர்ப்பு
      உடலியல்புகள் மாற்றமடைதல்
        - தலையோட்டின் வடிவம்
        - இரு கால்களில் எழுந்து நின்று நடக்கும் திறமை
    - ii. பண்பாட்டுக் கூர்ப்பு (இப்பகுதி 2.4 இல் கலந்துரையாடப்படும்)
      வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளலின்படி மனிதனின் விருத்திப்போக்கு
        - கருவிகள் உற்பத்தி
        - சூழலுக்கு இசைவடைதல்
        - பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ளல்
        - நகரங்கள் அமைத்துக் கொள்ளல்

i. உடலியல்புகளின்படி மனிதனின் விருத்திப் போக்கு
இதனைப் பாடநூலில் உள்ள படங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.

- மனிதனின் முதலாவது கூர்ப்புக் கட்டம்
    - ஒசுத்தலோபித்திக்கசு எனும் குரங்கு மனிதனை அறிமுகஞ் செய்தல்.
- மனிதனின் இரண்டாவது கூர்ப்புக் கட்டம்
    - ஹோமோ ஹபிலிசு
- ஹோமோ இரெக்டசு
- ஹோமோ நியன்டதாலென்சிசு

- நவீன மனிதன் - ஹோமோ சேபியன்சு
    - விருத்தியடைந்த மூளையைக் கொண்ட மனிதன்
    - இன்றைய உலகின் ஒவ்வொரு மக்கட் பிரிவும் ஹோமோசேபியன்சு வகையைச் சேர்ந்தது என்பதை விளக்குதல்

மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு மனிதனது விருத்திப் போக்கின் வெவ்வேறு கட்டடங்களைச் சித்திரமாக வரைதல்.

- இதனை வகுப்பறையில் குழுச் செயற்பாடாக முன்வைத்தல்.
- மனிதனது விருத்தியில் குரங்கு மனிதன் தொடக்கம் நவீன மனிதன் வரையில் இடம்பெற்ற நிகழ்வுகளைக் காட்டும், பொருத்தமான சித்திரங்களை முன்வைத்து மாணவருடன் கலந்துரையாடுதல்.
- மனிதனது விருத்தியானது நீண்டகாலமாக இடம்பெற்ற பல்வேறு செய்முறைகளின் விளைவாக நிகழ்ந்தமையை விளக்குதல்.
- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரித்து இணைப்பு-01 இல் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டின் முடிவில், குழு ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்த சந்தர்ப்ப மளித்தல்.
- பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு - மதிப்பீட்டை நடத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

இணைப்பு 01

**இணைப்பு : 01**

**செயற்பாட்டுப் பத்திரம்**

| | | | |
|---|---|---|---|
| **குழு - 1** | ஒசுத்தரோலோபிதிகசு, | ———— | ஹோமோ ஹபிலிசு |
| **குழு - 2** | ஹோமோ ஹபிலிசு, | ———— | ஹோமோ இரெக்டசு |
| **குழு - 3** | ஹோமோ இரெக்டசு, | ———— | ஹோமோ நியண்டதாலென்சிசு |
| **குழு - 4** | ஹோமோ நியண்டதாலென்சிசு, | —— | ஹோமோ சேபியன்சு |

**கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்**

- அந்தந்த மனிதனின் தெள்ளத்தெளிவான உடலியல்புகள் வெளிக்காட்டப்படும் வகையில் இரண்டு சித்திரங்களையும் வரையுங்கள்.
- வரைந்த சித்திரத்தைத் துணையாகக் கொண்டு அந்தந்த மனிதனின் உடலியல்பு களை விளக்குங்கள்.

- மனிதனின் உடற்கூர்ப்பைக் காட்டும் படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

மேற்படி செயற்பாட்டில் பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீடு செய்யுங்கள்.

- மனிதனின் விசேட இயல்புகளைக் குறிப்பெடுத்தல்
- மனிதனின் தெள்ளத்தெளிவான இயல்புகன் வெளிப்படுத்துமாறு சித்திரம் வரைதல்
- மனிதன் தோற்றம் பெற்றமை நீண்ட கடினமான பயணத்தின் பெறுபேறாகும் எனக் கூறுதல்.
- கூட்டாக ஆக்கம் படைத்தல்.
- செயற்பாட்டை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்கான தலைமைத்துவமேற்றுச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்**

2.3 இயற்கைச் சூழலுக்கு இசைவடையும் போது உடலின் இயல்புகள் மாற்றமடையும் முறையினை நவீன மனிதனை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள் : 01**

**கற்றற்பேறுகள்**

- வெவ்வேறு சூழல் நிபந்தனைகளை விபரிப்பார்.
- வெவ்வேறு சூழல் நிபந்தனைகளின்படி, நவீனமனிதனின் உடலியல்புகள் வேறுபடும் விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

2.3 புவியியற் காரணிகளின்படி மனிதனின் உடலியல்புகள் மாற்றமடைதல்.
இதற்காக பாடநூலில் உள்ள படங்களைப் பயன்படுத்தி விளக்கமளியுங்கள்.

- ஹோமோ சேபியன்ஸ் மனிதன் படிப்படியாக உலகெங்கும் பரவியமை
- சூழல் மாற்றங்கள் காரணமாக மனிதனின் புறத்தோற்றம் மாற்றமடைந்தமை.
- உடலியல்புகள் மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு காரணிகள்
    - சூரிய வெப்பம் - உலர் பிரதேசங்கள்
    - குளிர் காலநிலை
    - மலை, சமவெளி
  - மொங்கோலைட்டு, கோக்சைட்டு, நீக்ரோய்டு ஒசுத்திராலாயிட்டு உட்பட பல்வேறு உடலியல்புகளைக் கொண்ட மனிதர்கள்.
  - சுற்றாடல் காரணிகள் காரணமாக உடலியல்புகளும் பண்பாட்டு அம்சங் களும் வேறுபட்டபோதிலும் மனித இனம் ஒரே மூலத்திலிருந்து தோன்றி நிலவி வருகின்றமை

- இப்பாட விடயங்கள் உள்ளடங்குமாறு, அந்தந்த காலநிலை நிபந்தனைகளின் கீழ் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மனிதனின் படங்களைச் சேகரித்து அந்தந்த காலநிலை நிபந்தனைகளின் கீழ் மனிதனின் உடல் இயல்புகள் மாற்றமடைந்தமையை விளக்கிக் காட்டுவதற்காக படத்திரட்டுப் புத்தகம் தயாரித்தல்.
  - தனியாள் செயற்பாடாக இதனை வழங்குதல்.
  - செயற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக ஏறத்தாழ ஒருவார கால அவகாசம் வழங்குதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- வெவ்வேறு நாட்டு மக்களைக் காட்டும் ஒளிப் படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

மேற்படி செயற்பாட்டில் பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீடு செய்யுங்கள்.

- வெவ்வேறு உடலியல்புகளைக் கொண்ட மனித வர்க்கங்களைக் குறிப்பிடுவர்.
- சூழலின் பல்வகைமைக்கு அமைய மனிதனின் உருவ வேறுபாட்டையை விளக்குவார்.
- மனிதன் வடிவம் வேறுபடும் விதம் வெளிப்படுமாறு படப்புத்தகம் தயாரிப்பார்.
- படப்புத்தகத்தை ஆக்கபூர்வமாக தயாரிப்பார்.
- நேரத்தை முகாமை செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

2.4 ஆதி மனிதன் எதிர்கொண்ட சவால்களை வெற்றி கொண்ட முறைகளை விசாரித்தறிந்து, நிகழ்காலத்துடன் ஒப்பிட்டு, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய திறனை விருத்தி செய்து கொள்வார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- ஆதிமனிதன் எதிர்கொண்ட அறைகூவல்களை எடுத்துக்காட்டுவார்.
- ஆதிமனிதன் எதிர்கொண்ட அறைகூவல்களை வெற்றி கொண்ட விதத்தை எடுத்துக்காட்டுவார்.
- கடந்தகால முன்மாதிரிகளுக்கு அமைய தற்கால அறைகூவல்களையும் வெற்றி கொள்ளலாம் என்பதை எடுத்துக்காட்டுவார்.

பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

2.4 மனிதனின் பண்பாட்டுக் கூர்ப்பு

- வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டமைக்கு அமைய மனிதனின் விருத்திப்போக்கு.
- மனிதனும் இயற்கைச் சூழலும்
  மனிதன் எதிர்கொண்ட அறைகூவல்களும்
- மனிதன் பயன்படுத்திய கருவிகளுக்கு அமைய பிரதானமான யுகங்கள்.
  - முற்கற்காலம்
  - இடைக் கற்காலம்
  - புதிய கற்காலம்
- அந்தந்த யுகத்தில் அடைந்த வெற்றிகள்

மேற்படி பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு மனிதனின் பண்பாட்டுக் கூர்ப்பு தொடர்பாகத் தேடியறிதல்.

- இச்செயற்பாட்டில் வகுப்பு மாணவர் அனைவரையும் பங்குபற்றச் செய்தல்
- மனிதனின் தேவைகளை நிறைவு செய்தலின் போது முற்கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் எனக் கடந்துவந்த அந்தந்தக் காலங்களில் பெற்ற வெற்றிகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுதல்.
- இணைப்பு -01 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரத்தின்படி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

- இணைப்பு - 02 இல் தரப்பட்டுள்ள அட்டவணையைச் சுண்ணப் பலகையில் பிரதி செய்து அட்டவணையில் அந்தந்தக் குழுவுக்குரிய பகுதியைப் பூர்த்தி செய்யுமாறு குழுவுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- அட்டவணையில் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பாடத்தை மீளாய்வு செய்யுங்கள்.
- அட்டவணையை மாணவரது பயிற்சிப்புத்தகத்தில் பிரதி செய்து கொள்ளச் சந்தர்ப்ப மளியுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

**இணைப்பு : 1**

செயற்பாட்டுப்பத்திரம்

| | | |
|---|---|---|
| முற்கற்காலம் | இடைக் கற்காலம் | புதிய கற்காலம் |
| கருவிகள் உற்பத்தி செய்தமை | சித்திரம் வரைதல் | கமம் செய்யத் தொடங்கியமை |

**ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள்:**

- மேற்காட்டியவாறு யுகங்களையும் அந்தந்த யுகத்தில் பெற்ற வெற்றிகளையும் சீட்டுக்களில் குறித்துக்கொள்ளுங்கள்.
- வகுப்பில் உள்ள மாணவரின் தொகைக்கேற்ப மேலுள்ள சீட்டுக்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பில் மாணவர் ஒவ்வொருவருக்கும் சீட்டுக்களைப் பகிர்ந்தளித்து தமக்கிடையே கலந்துரையாடி அந்தந்த யுகம் மற்றும் அந்தந்த யுகத்தில் பெற்ற வெற்றிகளின்படி, மூன்று தொகுதிகளாகப் பிரியுமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- சுண்ணப்பலகையில் உள்ள அட்டவணையில் தமது குழுவுக்கு உரிய கட்டத்தைப் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.

**மாணவருக்கான அறிவுறுத்தல்கள்:**

- ஆசிரியரிடம் சீட்டுக்களைப் பெறுங்கள்
- சீட்டுக்களின்படி தமது குழுவை இனங்கண்டு அதனுடன் இணையுங்கள்.
- சுண்ணப்பலகையில் உள்ள அட்டவணையில் உங்களது குழுவுக்குரிய நிரலைப் பூர்த்தி செய்யுங்கள்.

**இணைப்பு : 2**

| முற்கற்காலத்தில் அடைந்த வெற்றிகள் | இடைக் கற்காலத்தில் அடைந்த வெற்றிகள் | புதிய கற்காலத்தில் அடைந்த வெற்றிகள் |
|---|---|---|
| | | |

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களைக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத:தங்கள்.

- பயன்படுத்திய கருவிகளுக்கு அமைய மனிதன் கடந்து வந்த யுகங்களைக் குறிப்பிடுவார்.
- அந்தந்த யுகத்தில் மனிதன் அடைந்த வெற்றிகளைக் குறிப்பிடுவார்.
- மனிதன் தனது தேவைகளின்படி சூழலை வெற்றி கொண்ட விதத்தை எடுத்துக் காட்டுவார்.
- செயலூக்கத்துடன் செயற்படுவார்.
- கூட்டுணர்வுடன் செயற்படுவார்.

## 6.3 உலகின் புராதன நாகரிகங்கள்

வானர சந்ததி வழியே தோன்றியதாகக் கருதப்படும் மனிதன் காலப்போக்கில் படிப்படியாக இன்று காணப்படும் விருத்தியடைந்த நிலையை எட்டியுள்ளான். அவ்வாறான விருத்தியின் மிக உயரிய நிலையே நாகரிகம் எனப்படுகின்றது. உலகின் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்த மனிதன், வெவ்வேறு காலங்களில் நாகரிகவயப்பட்டான். நாகரிகம் என்பதை வரைவிலக்கணப்படுத்தி யாதேனும் சமூகம் நாகரிகவயப்பட்ட நிலையை எடுத்துக் காட்டும் இயல்புகளை அறிமுகஞ் செய்வதோடு மானுட சமூகத்தின் மீது பண்டைய நாகரிகங்களின் பங்களிப்பை விளக்குவதே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி**

3.0 மானிட விருத்திப் போக்கினை எடுத்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்**

3.1 உலகின் புராதன நாகரிகங்களை விளக்குவார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- நாகரிகம் என்பதனை விளக்குவார்.
- நாகரிகமொன்றின் அடிப்படை இயல்புகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

3.1 நாகரிகம் - அறிமுகம்
- கிராமிய சமூகமானது நகரச் சமூகமாக மாற்றமடைவதன் மூலம் நாகரிகம் உருவாகின்றமை
- சமூகமொன்று நாகரிக வயப்படுவதற்கு மிக நீண்ட காலம் செல்லுகின்றமை
- பண்டைய கிராமத்துக்கும் நகரத்துக்கும் இடையிலான வேறுபாட்டை இனங் காண்பதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துதல்.

- இணைப்பு இல: 2 இல் தரப்பட்டுள்ள படங்களை வகுப்பில் காட்சிப்படுத்தி, கிராமத்துக்கும் நகரத்துக்கும் இடையிலான வேறுபாட்டைக் கலந்துரையாடுங்கள்.
- பண்டைக்காலத்தில் காணப்பட்ட, கிராமங்கள், நகரங்கள் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுவுக்கு ஒன்று வீதம் செயற்பாட்டுப்பத்திரம் (இணைப்பு : இல -1) பிரதிகளை வழங்குங்கள்.

- பண்டைய கிராமமொன்றையும் பண்டைய நகரமொன்றையும் சித்திரமாக வரையுமாறு அறிவுறுத்துங்கள்.
- குழுவின் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களைக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத:தங்கள்.

- பண்டைய கிராமமொன்றினதும் நகரமொன்றினதும் இயல்புகளைக் குறிப்பிடுவார்.
- பண்டைய கிராமத்தின் ஊடாக நகரம் கட்டியெழுப்பப்பட்டமையை ஏற்று வெளிப் படுத்துவார்.
- ஆக்கபூர்வமாகச் சித்திரத்தை வரைவார்.
- குழுவில் ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- நேரத்தை முகாமை செய்து கொள்வார்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

**இணைப்பு - 1, 2**

**செயற்பாட்டுப்பத்திரம் - 1**


- பண்டைய கிராமமொன்றின் இயல்புகளை வெளிக்காட்டும் வகையில் சித்திரமொன்று வரையுங்கள்.
- அச்சித்திரத்தை வகுப்பில் காட்சிப்படுத்தி விவரியுங்கள்.

**செயற்பாட்டுப்பத்திரம் - 2**

- பண்டைய நகரமொன்றின் இயல்புகளை வெளிக்காட்டும் வகையில் சித்திரமொன்று வரையுங்கள்.
- அச்சித்திரத்தை வகுப்பில் காட்சிப்படுத்தி விவரியுங்கள்.

**இணைப்பு - 2**

**கிராமக் காட்சி**



**நகரக் காட்சி**



**தேர்ச்சி மட்டம்**

3.2 உலகில் காணப்பட்ட புராதன நாகரிகங்களையும் அவற்றின் புவியியல் பரம்பலையும் தேசப்படத்திற் குறிப்பார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- உலகின் பண்டைய நாகரிகங்களைக் குறிப்பிடுவார்.
- நாகரிகங்களின் அமைவைத் தேசப்படமொன்றில் குறிப்பார்.
- நாகரிகங்கள் அமைந்திருந்த இடங்களை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

3.2 உலகின் புராதன நாகரிகங்கள்
- வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு புயியியற் பிரதேசங்களில் சுயாதீனமாக நாகரிகங்கள் வளர்ச்சியடைந்தமை
- புராதன நாகரிகங்கள் அவற்றின் புவியியல் பரம்பல், காலப்பகுதிகள்
- நாகரிகங்களின் பரம்பலை தேசப்படங்களில் காட்டுதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்டமிட்ட பாடத்துக்கேற்ப தேவையான பொருள்களைத் தயார்படுத்திக் கொள்க.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமான கற்றற்பேறுகளை அளக்கத்தக்கவாறு கணிப்பீட்டு நியமங்களைத் தயாரித்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

3.3 புராதன நாகரிகங்களின் மேம்பாட்டின் ஊடாக நிகழ்காலத்துக்காகப் பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள் : 05**

**கற்றற்பேறுகள்**

- பண்டைய நாகரிகங்களின் மேம்பாட்டை எடுத்துக்காட்டுவார்.
- நாகரிகங்களின் பண்டைப் பெருமைக்குக் காரணங்காட்டுவார்.
- பண்டைய நாகரிகங்கள் மூலம் தற்காலத்துக்காக பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க

- பண்டைய நாகரிகங்களின் மேம்பாடு தொடர்பாக, உதாரணங்காட்டி விளக்குதல்.
- நாகரிகங்களின் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுதல்.

3.3 புராதன நாகரிகங்கள் மூலம் உலகுக்கு உரித்தாகிய பெறுமானத் தொகுதி

சுமேரிய நாகரிகம்
- எழுத்துத்தொகுதி
- கட்டடங்கள்
- முதலாவது எழுத்துமூல சட்டத்தொகுதி
- கணித முறைகள்

எகிப்திய நாகரிகம்
- பூதவுடல்களை பேணிவைக்கும் முறைகள்
- கல்லறை நிர்மாணம் (பிரமிட்டுக்கள்)
- சித்திர எழுத்துப் பாவனை

சிந்து நதி நாகரிகம்
- நகரத்திட்டம்
- எழுத்துத் தொகுதி
- முறைமையான நீர்வடிப்பு முறைகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- நாகரிகம் தொடர்பான புத்தகங்கள், படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**
- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற் பேறுகளை கணிப்பீட்டு நியமங்களை தயாரித்து புள்ளி வழங்குக.

**6.4 இலங்கையில் குடியேற்றங்கள் நிறுவப்படல்**

இலங்கையில் ஆதி ஹோமோசேப்பியன் மனிதன் குடியேறியமை, நாட்டின் உட்பிரதேசங்களில் அவர்களின் பரம்பல், வாழ்க்கைமுறை போன்றவை இங்கு கலந்துரையாடப்படுகின்றது.

**தேர்ச்சி**

மானிட விருத்தியின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்**

4.1 இலங்கையின் ஆரம்பக் குடியேற்றங்களின் பரம்பலையும் அடிப்படைத்தன்மையைக் கற்று கால வெளிப் பல்வகைமையையும் விளக்கிக் கூறுவார்.

**பாடவேளைகள் : 05**

**கற்றற்பேறுகள்**

- குடியேற்றங்கள் பரவிய பிரதேசங்களை எடுத்துக்காட்டுவார்.
- ஆரம்பக் குடியேற்றங்களின் அடிப்படை இயல்புகளை விளக்குவார்.
- ஆதி மனிதன் இந்நாட்டின் பல்வேறு சூழல் வலயங்களுக்கு இசைவடைந்து வாழ்ந்தமையை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க

4.1 ஆரம்பக் குடியேற்றங்கள்

- ஆரம்பக் குடியேற்றங்களின் பரம்பல்
    - இற்றைக்கு ஏறத்தாழ ஓரிலட்சத்து முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிஹோமோசேபியன்ஸ் மானிடனுடன் இலங்கையின் தெற்குக் கரையை அடைந்தமை.
    - தெற்கு கரைக்கு மேலதிகமாக, இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் பரம்பிச் சென்றமைக்காக சான்றுகள் கிடைத்துள்ளமை.
    - ஆதிமானுடனின் பரம்பல் பிரதானமான மூன்று சூழல் வலயங்களில் நிகழ்ந்தமை.
    - பரம்பல் பிரதேசங்கள், தற்போது தொல்பொருளியல் ரீதியில் பரிசீலனை செய்யப்பட்ட ஆதிமனிதனின் வாழிடங்கள்
        - பட்டதொம்பலென குகை
        - கித்துல்கல குகை
        - பாகியன்கல குகை

- குடியேற்றங்களின் தன்மை

– ஆரம்பகால மனிதன் மழைக்காலங்களில் வாழ்வதற்காக கற்குகைகளைத் தெரிவு செய்துகொண்டமை.
– கோடை காலங்களில் திறந்த வெளியில் வேட்டை நிலையங்களைத் தமது வாழிடமாக்கிக் கொண்டமை.

- உணவு முறை
    - விலங்கு உணவுகள்
    - தாவர உணவுகள்

- தொழினுட்பம்
    - கல்லினாலான சிறிய கருவிகள் பயன்படுத்தப்பட்டமை
    - நம்பிக்கைகள், வழிபாடுகள்


- கிராமியக் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமை
    - நிலையான குடியேற்றங்கள் தாபிக்கப்பட்டமை
        - இரத்தினபுரி மாவட்ட ''கொலம்பகேஆர'' எனும் பிரதேசத்தைச் சேர்ந்த 'ரஞ்சாமடம' எனும் இடத்தில் கண்டுபிடிக்கபடட்ட இற்றைக்கு ஏறத்தாழ பதின்மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வரிச்சு வீடு
- ஆரம்ப கிராமியக் குடியேற்றங்களில் விவசாயம் பிரதான பொருளாதார நடவடிக்கையாகக் காணப்பட்டமை
- விவசாய நிலங்களைச் சார்ந்து சிறிய கிராமிய குளங்கள் அமைக்கப் பட்டமை
- கிராமிய குடியேற்றங்களை உருவாக்கியமை
- உலோகம் பயன்படுத்தப்பட்டமை
- கிராமிய மக்கள் வாழ்க்கை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக விருத்தி யடைந்து வரும் நிலையில் மக்கள் இந்து சமுத்திரத்தின் வழியே வெவ்வேறு நாடுகளுக்குக் கடற் பிரயாணம் செய்தமையினால் வணிகம் பிரபல்ய மடைந்தமை.
- நகரங்கள் தோன்றியமை
    - நகரங்கள் தாபிதம் பெற்றமையின் பின்னணி
    - இந்நாட்டின் முதன்மையான நகரங்கள்
- பாடநூலில் தரப்பட்டுள்ள செயற்பாட்டில் குழுவாக ஈடுபட சந்தர்ப்பமளித்தல்.
    - நகரங்கள் தோற்றம் பெற்றமையின் அடிப்படை அம்சங்களுக்காகப் பின்வரும் செயற்பாட்டைப் பயன்படுத்தியமை
    - பண்டைய நகரங்களின் அடிப்படை இயல்புகளைக் கொண்டு மாதிரி அட்டவணையொன்றினைப் பூர்த்தி செய்தல்.
    - இதனை தனியாள் செயற்பாடாகப் பயன்படுத்துங்கள்.
    - இணைப்பு - 1 இல் தரப்பட்டுள்ள வரிப்படத்தை சுண்ணப்பலகையில் பிரதி செய்து அதனைத் தமது பயிற்சிப் புத்தகத்தில் பிரதிசெய்து கொள்ளுமாறு அறிவுறுத்தவும்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களைக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- உலர் வலய நகர நாகரிகத்தின் இயல்புகளை விளக்குவார்.
- நகர நாகரிகத்தின் வளர்ச்சிக்குக் காரணங் காட்டுவார்.
- நகரங்களில் வாழ்ந்த போதிலும் உலர்வலய மனிதன் சூழல் நேயனாகச் செயற்பட்டமையைக் குறிப்பிடுவார்.
- வரிப்படத்தைச் சரியாகப் பூர்த்தி செய்வார்.
- அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுவார்.

**இணைப்பு : 1**




## 6.5 எமது கீர்த்திமிக்க அரசர்கள்

அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு, அரசபீட மேறிய பண்டுகாபய மன்னன் தொடக்கம் தாதுசேன மன்னன் வரையிலான ஏழு மன்னர்கள் பற்றிய விவரங்கள் இந்த அலகின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன. அம்மன்னர்களின், பொதுசனநேய ஆட்சி, கீர்த்தி, அவற்றின் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகள் ஆகியன குறித்து இங்கு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி**

புராதன இலங்கை மன்னர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளையும் மதித்து, அவர்களின் மேன்மையைத் தேடியறிவார்.

**6. 5.1 பண்டுகாபய மன்னன்**

**தேர்ச்சி மட்டம்**

5.5.1 பண்டுகாபய இளவரசன் சவால்களை வெற்றி கொண்டு அரசனாகிய விதத்தை தேடியறிவார்.

**பாடவேளைகள் : 01**

**கற்றற்பேறுகள்**

- பண்டுகாபய மன்னனின் இளமைக்காலம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.
- பண்டுகாபய இளவரசன் எதிர்கொண்ட அறைகூவல்களை விளக்குவார்.
- அறைகூவல்களை எதிர்கொள்வதற்காக பண்டுகாபய மன்னனின் வாழ்க்கைச் சரிதத்திலிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

5.1 பண்டுகாபய மன்னன்

**இளமைக்காலம்**

- பண்டுகாபய மன்னனின் தாய் - தந்தையர் தொடர்பான கதைகளை விளக்குங்கள்.
- இளவரசன் பிறந்த காலம் தொடக்கம் எதிர்கொண்ட சவால்களை விவரியுங்கள்.
    - பிறந்தவுடனேயே அரச மாளிகையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டமை
    - தொரமடலாவைக்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் இளவரசனது உயிரைக் கவர முயற்சிப்பட்டமை.
    - இளவரசன் நீராடிக்கொண்டிருந்த சந்தர்ப்பம்
    - இடையர் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சந்தர்ப்பம்.
- சவால்களை வெற்றி கொள்வதற்காக, பண்டுகாபய மன்னனின் வாழ்க்கைச் சரிதம் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்டமிட்ட பாடத்திற்குப் பொருத்தமானவாறு தேவையானவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்கு அமைய கற்றற் பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்து புள்ளி வழங்குங்கள்.

**தேர்ச்சி மட்டம்**

5.1.2 பண்டுகாபய மன்னனின் செயற்றிறனைத் தேடியறிவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- பண்டுகாபய மன்னன் அரசனான விதத்தை விளக்குவார்.
- பண்டுகாபய மன்னனின் அரசாட்சியை விவரிப்பார்.
- பண்டுகாபய மன்னனின் மேன்மையை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

- அரசனாதல்

  அரசனாவதற்காக பண்டுகாபய இளவரசன் கையாண்ட வழிவகைகளை விவரிக்குக
  - படைகளைத் திரட்டியமை
  - போரில் வெற்றி பெற்றமை

    அநுராதபுரத்தை ஆட்சி மையமாகக் கொண்டு அரசபீடமேறியமை.
- அரசாட்சி

  அனுராத கிராமத்தை அனுராதபுரமாக்கியமை
  - அனுராதபுர நகரத்தை அமைத்தமை
    - நகரின் எல்லைகளைக் குறித்தல்
    - அரசமாளிகைகள், பாதைகள், வீதிகள், வடிகால் தொகுதிகள், மயானங்கள், வைத்தியசாலைகள், நான்கு நுழைவாயில்கள்.
  - நகர நிருவாகப் பணிகளுக்காக அதிகாரிகளை நியமித்தமை
  - வெவ்வேறு மக்கட் பிரிவினர்க்காக நகரில் பிரதேசங்களை ஒதுக்கியமை.
  - கட்டுப்பாடற்ற சமயக் கொள்கையைப் பின்பற்றியமை (பிராமண, ஜைன, வழிபபாடுகள்)
  - பொருளாதார நடவடிக்கைகளுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (குளங்கள் கட்டுவித்தமை)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்டமிட்ட பாடத்திற்குப் பொருத்தமானவாறு தேவையானவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்கு அமைய கற்றற் பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்து புள்ளி வழங்குங்கள்.

**6.5.2 தேவநம்பியதீச மன்னன்**

**தேர்ச்சி**

புராதன இலங்கை மன்னர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளையும் மதித்து, அவர்களின் மேன்மையைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம்**

5.2.1 பௌத்த சமயம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டமையும் தாபிக்கப்பட்டமையும் தொடர்பாக தேவநம்பியதீச மன்னன் ஆற்றிய சேவையை எடுத்துக்கூறுவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- இலங்கைக்குப் பௌத்த சமயம் கிடைத்த விதத்தை விவரிப்பார்.
- பௌத்தசமயம் இலங்கையில் தாபிதமடைந்த விதத்தை விவரிப்பார்.
- தேவநம்பியதீச மன்னனின் சேவையை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

5.2.1 இலங்கைக்கு பௌத்த சமயம் கொண்டுவரப்படுதல்
- திஸ்ஸ இளவரசன் இலங்கையின் ஆட்சியாளராதல்.
- இலங்கையில் திஸ்ஸ மன்னனின் காலத்தில் இந்தியாவில் அசோக சக்கரவர்த்தி ஆட்சியாளராக இருந்தமை
- திஸ்ஸ மன்னனுக்கும் அசோக சக்கரவர்த்திக்கும் இடையே தொடர்புகள் இருந்தமை
- மகிந்த தேரரை முதன்மையாகக் கொண்ட சமய தூதர்கள் இலங்கையின் மிகிந்தலைக்கு வருகை தந்தமை
- தேவநம்பியதீசமன்னன் மகிந்தரின் போதனைகளைக் கேட்டு பௌத்த சமயத்தைக் தழுவியமையும் இலங்கையின் முதலாவது பௌத்த ஆட்சியாளரா கியமையும்.

5.2.2 பௌத்த சாசனம் தாபிக்கப்பட்டமை
- மன்னர் பௌத்த சமயத்தைத் தழுவிய பின்னர் அரச குடும்பத்தோடு ஏனைய பொது மக்களும் பௌத்தர்களாகியமை
- முதலாவது ஆராமை பிக்குமாருக்கு வழங்கப்பட்டமை
- பிக்கு சாசனம் தாபிக்கப்பட்டமை
- சங்கமித்திரை பிக்குணி, 18 குலத்தோருடன் வெள்ளரசு மரக்கிளையைக் கொண்டு வந்தமை
- வெள்ளரசு மரத்தை நடுதல்
- பிக்குணி சாசனம் தாபிக்கப்படுதல்
- நான்கு வகையினராலான சமூகம் தோற்றம் பெற்றமை

- முதலாவது தாதுகோபம் நிர்மாணிக்கப்படல்.
- மன்னன் தேவநம்பியதீசன் ஆற்றிய சேவைகளை உதாரணங்களுடன் முன்வையுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- புத்த சமயம் தாபிக்கப்பட்டமை பற்றிக் கூறும் நூல்கள், படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்கு அமைய கற்றற் பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்து புள்ளி வழங்குங்கள்.

**பிரதான சொற்கள் ∴ எண்ணக்கருக்கள்**

- நான்குவகையினர் - பிக்கு, பிக்குணி, உபாசக, உபாசகி

**தேர்ச்சி மட்டம்**

5.2.2.3 ஒழுக்கப்பண்புள்ள சமூகத்தைக் கட்டியெழுப்ப, பௌத்த சமயத்தினால் கிடைத்த சிறந்த குணப்பண்புகளை விருத்தி செய்துகொள்வார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- பௌத்த சமயம் மூலம் கிடைத்த அரும்பொக்கிசங்களை விவரிப்பார்.
- ஒழுக்கம்மிக்க சமூகம் கட்டியெழுப்பப்பட்ட விதத்தை விவரிப்பார்.
- தற்கால நன்மக்கட் சமுதாயத்துக்காகப் பயன்படுத்தத்தக்க பண்டைய முன்மாதிரி களை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

5.2.3 பௌத்த சமயத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அரும்பொக்கிசங்கள்

- பௌத்த சமயம் காரணமாக வெவ்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டமை
  - ஒழுங்கமைந்த சமயமொன்று கிடைத்தமை
  - பின்வரும் விடயங்களை வெளிக்கொணருங்கள்
    - அர்த்தபுஷ்டியானவாறு கிரியைகளைப் பின்பற்றுதலை உதாரணங்கள் மூலம் விளக்குதல்.
    - மரங்கள், கற்களை வணங்குதல், போதி விருட்சம், தாதுகோபங்களை வணங்குதல்.
    - இறந்தோர் வழிபாடு - இறந்தோருக்காகப் புண்ணியஞ் செய்தல்.
    - தீயைக் கடவுளாக வணங்குதல் - தீப வழிபாடு
    - பேய்களுக்கான பலிபூசை செய்தல் - தானம் வழங்குதல்
- எழுத்துத் துறையும் இலக்கியமும்
- பொருளாதார முறை
- பொதுமக்களின் வாழ்க்கை
- பண்டைய சமூகத்தில் காணப்பட்ட பழக்கவழக்கங்கள், ஒழுக்கங்கள், விழுமியங்கள், ஆளிடைத்தொடர்புகளை உதாரணங்காட்டி விளக்குங்கள்.
- கடந்தகால முன்மாதிரிகளை கற்காலத்துக்காகப் பயன்படுத்தத்தக்க விதத்தை உதாரணங்காட்டி விளக்குங்கள்.

மேற்படி விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
- இணைப்பு - 1 இல் தரப்பட்டுள்ள அட்டவணையை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அட்டவணையைத் தமது பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்துகொள்ளுமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- பாடநூலையும் துணையாகக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

கணிப்பீடு மதிப்பீட்டுக்காகப் பின்வரும் நியமங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்துங்கள்.

- பௌத்த சமயத்தின் மூலம் கிடைத்த அரும்பொக்கிசங்களை குறிப்பிடுதல்.
- பௌத்த சமயத்தின் மூலம் கிடைத்த அரும்பொக்கிசங்களை மதித்தல்.
- அட்டவணையை சரியாகப் பூர்த்தி செய்தல்.
- ஆசிரியரது அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்.
- நேரம் பேணிக் கருமத்தை நிறைவு செய்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

**இணைப்பு : 1**

பௌத்த சமயத்தின் மூலம் கிடைத்த அரும்பொக்கிசங்களைக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| சமயம் சார்ந்தவை | சமூகம் சார்ந்தவை | பொருளாதாரம் சார்ந்தவை | எழுத்துத்துறை மற்றும் இலக்கியம் சார்ந்தவை |
|---|---|---|---|
| | | | |
| | | | |

**6.5.3 துட்டகைமுனு மன்னன்**

**தேர்ச்சி**

புராதன இலங்கை மன்னர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளையும் மதித்து, அவர்களின் மேன்மையைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம்**

5.3.1 துட்டகைமுனு மன்னனின் மேன்மையை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள் : 04**

**கற்றற்பேறுகள்**

- எல்லாள மன்னர் நல்வழி நின்ற விதத்தை விவரிப்பார்.
- காவந்தீச மன்னனின் செயல்களை விவரிப்பார்.
- துட்டகைமுனு மன்னனின் மேன்மையை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

5.3 மன்னன் துட்டகைமுனு
- இளமைக்காலம்
  - பெற்றோர்
  - இளமைக்காலம் பற்றிய கதைகள்

- மன்னன் எல்லாளன்
  - மன்னன் எல்லாளன் அறநெறியாளன் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை
  - சட்டத்தை மதித்து நடந்தமை, பொதுமக்கள் நேர்மையாக இருந்தமை
  - மரபுவழியில் செயற்பட்டமை

- மன்னன் காவந்தீசன்
  - சமகால சவால்களை வெற்றி கொள்வதற்காக மன்னன் காவந்தீசன் எடுத்த நடவடிக்கைகள்
    - படைகளை ஒழுங்கமைத்தமை
    - உருகுணையை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்தமை
    - பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தியமை
    - தருணம் வரும்வரை காத்திருந்தமை

- மன்னர் துட்டகைமுனு நாட்டை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்தமை
- வெளிநாட்டு ஆக்கத்திலிருந்து நாட்டை விடுவித்தலே பிரதான நோக்கமாக

இருந்தது.

- படைகளைத் திரட்டி போர் நடத்தியமை
- போரில் வெற்றி பெற்று நாட்டை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தமை

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்டமிடப்பட்ட பாடத்துக்கப் பொருத்தமானவாறு தேவையானவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்கு அமைய கற்றற் பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்து புள்ளி வழங்குங்கள்.

5.3.2 துட்டகைமுனு மன்னனின் சமயத்தொண்டை மதித்து நற்பண்புகளை நடத்தையாக்கிக் கொள்வார்.

**பாடவேளைகள் : 01**

**கற்றற்பேறுகள்**

- துட்டகைமுனு மன்னனின் சமயத்தொண்டை விவரிப்பார்.
- தற்கால நற்சமூகத்துக்காக பயன்படத்தக்க பண்டைய முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.

5.3.2 விகாரைகள் கட்டுவித்தமை

- துட்டகைமுனு மன்னர் பௌத்த சமயத்துக்கு ஆற்றிய சேவைகள்
- விகாரைகள் கட்டுவித்தமை - (மிரிசவற்றிய, லோவாமகாபாய, ருவன்வெலிசேய)
- வைகாசிப் பௌர்ணமி தினம் உற்சவங்கள் நடத்தல்.
- துட்டகைமுனு மன்னனின் வாழ்க்கையில் இருந்து பெறத்தக்க முன்மாதிரிகளை விவரியுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

திட்டமிடப்பட்ட பாடத்துக்குப் பொருத்தமானவாறு தேவையானவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள், அமையத்தக்க வகையில் கணிப்பீட்டு நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

## 6.5.4 மன்னன் வலகம்பாகு

**தேர்ச்சி**

- புராதன இலங்கை மன்னர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளையும் மதித்து, அவர்களின் மேன்மையைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம்**

5.4.1 வலகம்பாகு மன்னனின் மேன்மையை மதித்து அம் முன்மாதிரிகளை நடத்தை யாக்கிக் கொள்வார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- வலகம்பாகு மன்னன் அரசனாகிய விதத்தை விளக்குவார்.
- வலகம்பாகு மன்னனின் சமயத் தொண்டுகளை விவரிப்பார்.
- வலகம்பாகு மன்னனின் வாழ்க்கைச் சரிதம் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

5.4 மன்னன் வலகம்பாகு

- சத்தாதிஸ்ஸ மன்னனின் இளைய புத்திரன் ஆவார்.
  - இளமைக்காலம் தொடர்பான கதைகள்
- அரசனாதல்
- வலகம்பாகு மன்னனின் சமயத்தொண்டு
  - அபயகிரி தூபியை கட்டுவித்தல்
- இலங்கையின் முதலாவது மிகப்பெரிய தூபி
- அபயகிரி விகாரையைக் கட்டுவித்து குப்பிக்கலதிஸ்ஸ தேரருக்குக் காணிக்கை யாக்கியமை
- பிற்காலத்தில் அபயகிரி விகாரைத் தொகுதியை மையமாகக் கொண்டு சருவதேச கல்விமையம் உருவாகியமை
- கட்டுவித்த ஏனைய விகாரைகள், தாதுகோபங்கள்

திரிபிடகத்தை நூலுருப்படுத்தல்
- திரிபிடகத்தை நூலுருப்படுத்துவதில் பங்களிப்புச் செய்த காரணிகளை விவரித்தல்.

- 14 ஆண்டு காலம் காணப்பட்ட பிராமணதீச பஞ்சம்
- திரிபிடகத்தை மனப்பாடம் செய்திருந்த, திரிபிடக தர்மத்தை தெரிந்து வைத்திருந்த பிக்குகள் நாட்டைவிட்டு வெளியேறியமையும் பெருந்தொகை யானோர் மரணத்தைத் தழுவியமையும்.
- வாய்வழியாகப் பேணிவரப்பட்ட திரிபிடக தர்மத்தை அழிவிலிருந்து பாதுகாப் பதற்காக மாத்தளை, அலுவிகாரையில் திரிபிடகம் நூலுருப்படுத்தப்பட்டது.

**பிரதான சொற்கள் / எண்ணக்கருக்கள்**

- கர்ண பரம்பரை - செவிவழியாக, மனனமாக பரம்பரை வழிவருதல்,
  பிராமணதீச - பஞ்சம் ஒரு பஞ்சம் இது 14 வருட காலம் நீடித்தது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்டமிட்ட பாடத்துக்குப் பொருத்தமானவாறு, தேவையானவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்கு அமைய, கற்றற்பேறுகள், அளக்கப்படும் வகையில் நிமயங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

### 6.5.5 மன்னன் வசபன்

**தேர்ச்சி**

புராதன இலங்கை மன்னர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளையும் மதித்து, அவர்களின் மேன்மையைத தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம்**

5.5.1 மன்னன் வசபனின் செயற்றிறனை விவரிப்பார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- மன்னன் வசபன் அரசாட்சி ஏற்ற விதத்தை எடுத்துக்காட்டுவார்.
- மன்னன் வசபனின் ஆட்சியை விவரிப்பார்.
- மன்னன் வசபனின் பொருளாதாரச் சேவைகளை விளககுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

5.5 மன்னன் வசபன்
- இலம்பகர்ண அரச பரம்பரையின் முதலாவது மன்னன்

அரசாட்சி ஏற்றல்
- சவால்களை எதிர்கொண்டு ஆட்சியேற்றல்.
- முழு நாட்டையும் ஒருமைப்படுத்தி ஆட்சி செய்தல்.
- பிரதேசங்களாகப் பிரித்தல்.

பொருளாதார சேவை
- காணப்பட்ட கிராமிய குளத் தொகுதியை விரிவுபடுத்தியமை
- குளங்கள் (நடுத்தர அளவுடைய குளங்கள்), கால்வாய்கள், (யோத கால்வாய்) சுரங்க நீர்வழிகள்
- நீர்ப்பாசன வலையமைப்பொன்றினை உருவாக்கியமை
- வரி அறவிட்டமை

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்டமிட்ட பாடத்துக்கேற்ப தேவையான பொருள்களைத் தயாரித்துக் கொள்வார்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**
- பாடத்துக்கு அமைய, கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

**6.5.6 மன்னன் மகாசேனன்**

**தேர்ச்சி**

புராதன இலங்கை மன்னர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் அவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளையும் மதித்து, அவர்களின் மேன்மையைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம்**

5.6 மன்னன் மகாசேனனின் மேன்மையை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- மன்னன் மகாசேனனின் நீர்ப்பாசனச் சேவையை விவரிப்பார்.
- மன்னன் மகாசேனனின் கட்டட நிர்மாணத்துறைத் திறமைகளை எடுத்துக்காட்டுவார்.
- மன்னன் மகாசேனனின் சமயத்தொண்டுகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்க.

**5.6 மன்னன் மகாசேனன்**

- அரசாட்சியேற்றல்
  - பொருளாதார சேவை
- பாரிய குளங்களைக் கட்டுவித்தமை
  - மின்னேரியாக் குளம் உட்பட பல குளங்களைக் கட்டுவித்தமை.
    - அலகரைக் கால்வாயைக் கட்டுவித்தமை
  - வடக்குத்திசையில் அமைந்திருந்த வயல்களுக்கு நீரைக்கொண்டு செல்லல்.
  - குளங்களுக்கு நீர் விநியோகித்தல்.
  - பண்டங்களைக் கொண்டு செல்வதற்கும் போக்குவரத்துக்கும் கால்வாயைப் பயன்படுத்தல்.
- நீர்ப்பாசனத் துறைக்கு செய்த சேவை காரணமாக பிற்காலத்தில் பொதுமக்கள் தெய்வமாக உருவகித்து வழிபாடுகள் நடத்தியமை.
- மன்னன் மகாசேனனின் சமயத்தொண்டை பின்வரும் விடயங்களின் கீழ் விவரித்தல்.
- ஜேத்தவணாராமையைக் கட்டுவித்தமை
  - மகாவிகாரைக்குட்பட்ட எல்லையினுள் ஜேத்தவனாராமையைக் கட்டுவித்தமை
  - இது அக்காலத்தில் உலகில், ஆசியாவின் இருந்து மிகப்பெரிய செங்கற் கட்டடமாகும்.
  - மேலும் பத்து விகாரைகளைக் கட்டுவித்தமை
    உதாரணம்: மின்னேரியா, கோகண்ணை
    கலந்தக்கை போன்றன அவற்றுள் சில விகாரைகளாகும்.
- மன்னன் மகாசேனன் தொடர்பான நாட்டார் கதைகளை முன்வைத்தல்.
- இணைப்பு 1, 2, 3 ஆகியவற்றைப் பயன்படுத்தி மன்னன் மகாசேனன் பற்றிய

தகவல்களை உள்ளடக்கிய மடிப்பேடு தயாரித்தல் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துதல்.

- ஒரு குழுச் செயற்பாடாக செய்யுமாறு அறிவுறுத்துதல்.
- இணைப்பு - 02 இல் மடிப்பேடு தயாரித்தல் தொடர்பாக அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**


பின்வரும் விடயங்களுக்கு அமைய கணிப்பீடு, மதிப்பீட்டை தயார் செய்யுங்கள்.

- மன்னன் மகாசேனன் பற்றிய தகவல்களைத் திரட்டி முன்வைத்தல்.
- மன்னன் மகாசேனன் நாட்டுக்கு ஆற்றிய சேவைகளை மதித்தல்.
- மன்னன் மகாசேனன் தொடர்பாக தகவல்களை உள்ளடக்கிய மடிப்பேடு தயாரித்தல்.
- குழுவில் ஒத்துழைத்துச் செயற்படுதல்.
- மடிப்பேட்டை ஆக்கபூர்வமாகத் தயாரித்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- $A_4$ அளவுடைய கடதாசிகள் - 3
- $A_3$ அளவுடைய கடதாசிகள் - 2 (அல்லது ஒப்பான வேறு கடதாசி)
- (வகுப்பில் மாணவர் தொகை அதிகமெனின், அதிக எண்ணிக்கை மடிப்பேடுகள் (தயாரிப்பதற்காக போதுமான அளவு பொருள்களைத் தேடிப் பெற்றுக்கொள்க)
- பாடநூல், மன்னன் மகாசேனன் தொடர்பாக விவரங்களையறிய ஏனைய நூல்கள்
- பசை
- ∴பெல்ற் பேனைகள் / நிறப்பென்சில்கள்

**இணைப்பு : 1**



**இணைப்பு : 2**

- $A_3$ கடதாசியை அல்லது அதனை ஒத்த கடதாசியை எடுத்து இணைப்பு - 1 இல் படத்தில் காட்டியவாறு ஆறு பக்கங்கள் அமையுமாறு மடித்து, மடிப்பேட்டைத் தயாரித்துக்கொள்ளுங்கள்.
- மாணவர் குழுக்களின் ஆக்கங்களை மடிப்பேட்டின் உரிய பக்கங்களில் ஒட்டுங்கள்.

குழு -1

- ''மன்னன் மகாசேனன் கட்டுவித்த குளங்கள்'' எனும் தலைப்பின் கீழ் விடயங்களைக் கோவைப்படுத்துங்கள்
- அவ்விடயங்களை ($A_4$ கடதாசியை நீளப்பாடாக இரண்டாக மடித்து) தாளில் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் எழுதுங்கள்.
- முடியுமெனின் படங்கள் /சித்திரங்கள் மூலம் ஆக்கத்துக்கு மேலும் அழகூட்டுங்கள்.
- தயாரித்த தாளை மடிப்பேட்டின் இரண்டாம் பக்கத்தில் ஒட்டுங்கள்.

குழு -2

- ‘‘மன்னன் மகாசேனன் நிர்மாணித்த நீர்ப்பாசனக் கால்வாய்களும் அவற்றின் பயன் களும்’’ எனும் தலைப்பில் தகவல்களைத் திரட்டுங்கள்
- அவ்விடயங்களை ($A_4$ கடதாசியை நீளப்பாடாக இரண்டாக மடித்து) தாளில் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் எழுதுங்கள்.
- முடியுமெனின் படங்கள் /சித்திரங்கள் மூலம் ஆக்கத்துக்கு மேலும் அழகூட்டுங்கள்.
- தயாரித்த தாளை மூன்றாம் பக்கத்தில் ஒட்டுங்கள்.

குழு -3

- ‘‘மன்னன் மகாசேனனின் சமயத் தொண்டு’’ எனும் தலைப்பில் தகவல்களைத் திரட்டுங்கள்
- அவ்விடயங்களை ($A_4$ கடதாசியை நீளப்பாடாக இரண்டாக மடித்து) தாளில் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் எழுதுங்கள்.
- முடியுமெனின் படங்கள் /சித்திரங்கள் மூலம் ஆக்கத்துக்கு மேலும் அழகூட்டுங்கள்.
- தயாரித்த தாளை மடிப்பேட்டின் நான்காம் பக்கத்தில் ஒட்டுங்கள்.

குழு -4

- ‘‘மன்னன் மகாசேனன் பற்றிய நாட்டார் கதைகள்’’ எனும் தலைப்பில் விடயங்களைத் திரட் டுங்கள்.
- அக்கதையை / கதைகளை
- அவ்விடயங்களை ($A_4$ கடதாசியை நீளப்பாடாக இரண்டாக மடித்து) தாளில் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் எழுதுங்கள்.
- முடியுமெனின் படங்கள் /சித்திரங்கள் மூலம் ஆக்கத்துக்கு மேலும் அழகூட்டுங்கள்.
- தயாரித்த தாளை மடிப்பேட்டின் ஐந்தாம் பக்கத்தில் ஒட்டுங்கள்.

**தேர்ச்சி மட்டம்**

6.5.7 தாதுசேன மன்னன் ஆற்றிய சேவையை விவரிப்பார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- தாதுசேன மன்னன் அரசாட்சியை பெற்ற விதத்தை எடுத்துக்காட்டுவார்.
- மன்னன் தாதுசேனனின் பொருளாதார நடவடிக்கைகளை விவரிப்பார்.
- மன்னன் தாதுசேனனின் சமயத்தொண்டுகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாடவிடயங்களைக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.

5.7 மன்னன் தாதுசேனன்

- அரசாட்சியேற்றல்
  - மன்னன் தாதுசேனன் அரசாட்சியைப் பொறுப்பேற்க முன்னர் காணப்பட்ட அரசியல் குழப்பநிலை
  - ஏறத்தாழ 30 ஆண்டுகள் நிலவிய வெளிநாட்டார் ஆட்சி வெளிநாட்டாரிட மிருந்து நாட்டை மீட்டெடுத்தமை
  - மோரிய அரச வம்சத்தின் முதலாவது அரசன்
- மன்னன் தாதுசேனனின் பொருளாதார, சேவையைப் பின்வரும் விடயங்களின்கீழ் விளக்குதல்.

- பொருளாதார சேவை
  - கட்டுவித்த குளங்கள்.
  - நீர்ப்பாசனக் கால்வாய்கள்
- மன்னன் தாதுசேனனின் சமயத் தொண்டைப் பின்வரும் விடயங்களின் கீழ் விளக்குதல்.
  - அவுக்கணை சிலையைச் செய்வித்தமை
  - விகாரைகள் நிறுவியமை

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்டமிட்ட பாடத்துக்கேற்ப தேவையான பொருள்களைத் தயாரித்துக் கொள்வார்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்கு அமைய, கற்றற்பேறுகள், அளக்கப்படும் வகையில் நிமயங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.